egistered as a News paper in Ceylon ★ ★ [illegible] சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 4

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 26 ஆம் நாள் றம்ழான் 23 (8-2-64) சனிக்கிழமை இதழ் 362

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறமான
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
—— யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட ——
எம். பரராசசிங்கம்
சேலப் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

திருமலையில் இன்று முக்கிய மகாநாடு

சிங்களத் திணிப்பை எதிர்ப்பதுபற்றி ஆராயும்

கல்வி, காணிப்பங்கீடுபற்றியும் ஆலோசனை

திருக்கோணமலை, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களம் திணிக்கப்படுவதை எப்படித் தடுப்பது என்பது பற்றியும் இந்த மாகாணங்களிலுள்ள ஸ்தல ஸ்தாபன சபைகளில் தமிழில் சகல அலுவல்களையும் செய்வது பற்றியும் நாளை சனிக்கிழமை காலை திருக்கோணமலை நகர மண்டபத்தில் நடைபெறும் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் மகாநாட்டில் ஆராயப்படும். தமிழ்ப்பகுதிகளில் நிலம் வழங்கப்படுவது, கல்வி போதனை முதலிய பிரச்னைகள் பற்றியும் மகாநாட்டில் ஆராயப்படும் என்று இந்த மகாநாட்டைக் கூட்டும் டாக்டர் சிவானந்தம் தெரிவித்தார்.

மகாநாட்டிற்கான ஒழுங்குகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. சனிக்கிழமை காலை 10 மணிக்கு மகாநாடு ஆரம்பமாகும். இதில் கலந்து கொள்வதற்காக வரும் நூற்றுக்குமதிகமான உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் தங்குவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

சிங்களச் சட்ட அமுலை உள்ளூராட்சிச் சபைகள் மூலம் தமிழ் பகுதிகளில் திணிக்க அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளை எப்படித் தடுப்பதென்றும் தமிழ் பகுதி உள்ளூராட்சிச் சபைகளின் அலுவல்களை தமிழில் மட்டும் எப்படி நடத்துவதென்பது பற்றியும் இம்மகாநாட்டில் முக்கியமாக ஆராயப்படவிருக்கிறது.

தமிழ்ப்பகுதி உள்ளூராட்சிச் சபை கூட்டணியொன்றை உருவாக்குவது பற்றியும் மகாநாடு முடிவு செய்யும்.

"வருடா வருடம் மகாநாடு கூட்டப்படவேண்டும்"

நல்லூர், சனி

இன்று காலை திருக்கோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ஸ்தல ஸ்தாபனசபைத் தலைவர்கள் மகாநாடு, வருடந்தோறும் கூட்டப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென காங்கேசன்துறை பட்டினசபைத்தலைவர் திரு. மு. திடவிரசிங்கம், டாக்டர் எஸ். சிவானந்தனுக்கு அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுள்ளார்.

பட்டினசபையில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் தாம் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவிப்பதாக திரு. திடவீரசிங்கம் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தன் வடக்கு, கிழக்கு மாகாணங்

(2-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

கிரிக்கெட்

4-வது டெஸ்ட்

நேரு பார்வையிடுவார்

புதுடில்லி, பெப். 7

இந்திய கோஷ்டிக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்குமிடையேயான நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் நாளை சனிக்கிழமை புதுடில்லியில் நடைபெறும். இந்தியக் கோஷ்டிக்கு பட்டாபியும் இங்கிலாந்துக் கோஷ்டிக்கு ஸ்மித்தும் தலைமை வகிக்கின்றனர். இங்கிலாந்து கோஷ்டியைச் சேர்ந்த கென்பெரிங்டன், கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக தாயகம் திரும்பியுள்ளார்.

நாளைய ஆட்டத்தை பிரதமர் நேரு பார்வையிடுவார்.

223 : 6

தென்னாபிரிக்க கோஷ்டிக்கும் அவுஸ்திரேலிய கோஷ்டிக்குமிடையில் சிட்னியில் இன்று ஆரம்பமான 5-வது இறுதி டெஸ்டில் அவுஸ்திரேலிய கோஷ்டி முதலாவது இன்னிங்சில் 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 223 ஓட்டங்கள் எடுத்தது.

ஜெயதேவன் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

சிமெந்து கூட்டுஸ்தாபனத்திலிருந்து வர்த்தக அமைச்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு. டி. ஜெயதேவன் இன்று தெரிவிக்கையில்; உயர் பதவியிலுள்ள ஊழல்கள் எல்லாவற்றையும் தாம் வெளியிடப்போவதாக குறிப்பிட்டார்.

'அதிகாரபூர்வமாக எந்தக் குற்றச்சாட்டும் என் கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை. எனக்குத் தெரிந்த அளவில் விசாரணைகள் கூட நடைபெறவில்லை. மேலிடத்திலுள்ள ஊழல்களை வெளியிடத் தயாராகிவிட்டேன்' என்றும் அவர் தெரிவித்தார்.

அவசரக் கூட்டம்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 17ம் திகதி தமிழரசுக் கட்சி நடத்தவிருக்கும நேரடி நடவடிக்கை குறித்து தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளை 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவசரக் கூட்டமொன்றை நடத்தவிருக்கிறது.

காலி துறைமுகத்தில் சிப்பாய்கள் மிரட்டல்

முழு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படைத் தளபதி உத்தரவு

சாட்சியமளித்தால் கொல்லப்படுவீர் என்று எம். பி. க்கு பயமுறுத்தல்!

கொழும்பு, வெள்ளி

வியாழக்கிழமை, காலி துறைமுகத்தில் துறைமுகத் தொழிலாளர்களுக்கும் இலங்கை கடற்படையைச் சேர்ந்த சிப்பாய்களுக்கும் ஏற்பட்ட சம்பவம் குறித்து முழு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை ரோயல் கடற்படைத் தளபதி கமாண்டர் ராஜன் கதிர்காமர்; 'கஜபாகு' கப்பலின் தலைமை அதிகாரியை அவசரமாகக் கேட்டுள்ளார்.

நேற்று முன் தினம், காலியில் கடற்படைக்குச் சொந்தமான கப்பலைச் சேர்ந்த சிப்பாய்கள் சுழல் துப்பாக்கிகள் சகிதமாக வந்து துறைமுகத் தொழிலாளரைச் சுடப்போவதாக பயமுறுத்தியதாக துறைமுகத் தொழிலாளர்கள் சுமத்திய குற்றச்சாட்டைத் தொடர்ந்தே அறிக்கை சமர்ப்பிக்குமாறு "கஜபாகு" கப்பல் பிரதம அதிகாரி கேட்கப்பட்டுள்ளார்.

'கஜபாகு' கப்பலில் இருக்கும் சிப்பாய்கள் "நடந்து கொண்ட விதம்" பற்றி துறைமுகத் தொழிலாளர்கள் கூப்பாடு போட்டு புகார் செய்ததைத் தொடர்ந்தே சிப்பாய்கள் அவர்களைப் பயமுறுத்தியதாகக் கூறப்படுகிறது. தொழிலாளர்களின் செயலைக்கண்ட சிப்பாய்கள், "கஜபாகு" கப்பலிலிருந்து இறங்கிவந்து "சண்டியர்கள் யாருமிருந்தால் வாருங்கள் உங்களைச் சுட்டுத் தள்ளுவோம்" என்று தொழிலாளர்களைப் பயமுறுத்தினரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சுமார் 150 தொழிலாளர்கள் தங்களது வேலையை விட்டு முன்வந்து சுடும்படி கோரினர் என்றும், சிப்பாய்கள் கப்பலுக்குத் திரும்பியதும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப மறுத்து இதுபற்றி விசாரணை நடத்தும்படி கோரினர் என்றும் கூறப்படுகிறது.

கடற்படைச் சிப்பாய்கள் காலியில் தகாத முறையில் நடந்துகொண்டனரென்றும் தகராறு கொண்டவர்களை சுட்டுவிடுவதாக அவர்கள் பயமுறுத்தினரென்றும் காலி எம். பி. திரு. தகநாயக்காவும் ஹினிடும எம். பி. திரு. ஹென்றி திஸநாயக்காவும் பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட ஆஸ்பத்திரி சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
12 Z 0227 — ரூ 46,180
இரண்டாவது பரிசு
10 M 1940 — ரூ 18,472
மூன்றாவது பரிசு
14 R 0684 — ரூ. 9,236

தலா ரூ. 369.44 பெறும் 50 டிக்கட்டுகள் வருமாறு:

(2-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

அமைதியான ஒரு இடத்தில் அமர்ந்து உனது இதயக்கதவுகளை அகலத் திறந்து உனது இதயத்தின் ஆழ்ந்த இடத்திற்கு புலனைச் செலுத்து. பின் என்னவானாலும் அதன் படி நட.

— ஏபரஹாம் ஹபீடி

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
தை மீ 26 உ (8-2-64)

நடுநிலைமைநாடுகள் மகாநாடு

கோஷ்டி சேராத நடுநிலைமைநாடுகளின் இரண்டாவது மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசனை செய்யும் பொருட்டு இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஆசிய விவகாரப்பகுதி அதிபர் திரு. ஜி. எஸ். பீரிஸ் பெய்ரோவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பது பயனுள்ள செய்கையென்றே தோன்றுகிறது. நடுநிலைமைநாடுகளின் மகாநாடு கூடுவதால் பயன்கிடைக்கும் எனக் கருதும் நாடுகளும் 'பாண்டுங்பாணி'யில் மற்றொரு ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் மகாநாடொன்றைக் கூட்டுவதே அதிக பயன் தரும்எனக் கருதும் நாடுகளும் உள்ளன. இரண்டு மகாநாடுகளுமே நடைபெறட்டும். இரண்டும் பயன் தரும் என்பது இலங்கையின் கருத்தாக இருப்பினும் நடுநிலைமைநாடுகளின் இரண்டாவது மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்ற யோசனையை முதலில் ஒருகூட்டறிக்கை மூலம் வெளியிட்டது இலங்கையும் ஐக்கியஅரபுக் குடியரசும்தான் என்பதுகுறிப்பிடத்தக்கது. நடுநிலைமைநாடுகளின் மகாநாட்டில் இந்திய-சீன எல்லைப் பிரச்னை உட்படட பல முக்கிய பிரச்னைகள் விவாதிக்கப்படவிருப்பதால் அதையிட்டு பூர்வாங்கமாக ஆலோசனை நடத்தி சரியான திட்டங்களுடன் மகாநாட்டைக் கூட்டுவதே முறையானசெய்கையாகும். இந்தவகையில் நடுநிலைமை நாடுகளுக்கிடையில் தூதர்கட்டத்தில் முதலில் ஆலோசனை செய்து பின்னர் வெளிவிவகாரமந்திரிகள் சந்தித்துப் பேசி முடிவில்தலைவர்களின் மகாநாட்டைக் கூட்டும் முயற்சியை யாரும் வரவேற்கவே செய்வர். இதேசமயம் நடுநிலைமைநாடுகளின் பெல்கிரேட் மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளுடன் மற்றும் சில நாடுகளையும் சேர்த்துக் கொள்வதற்கு யூகோஸ்லேவியாவும் இந்தியாவும் ஒப்புக் கொண்டிருப்பதும் நம்பிக்கையளிப்பதாகவுள்ளது.

நடுநிலைமைநாடுகளின் மகாநாட்டை சீனா விரும்பவில்லை. அந்த மகாநாட்டில் சீனாவுக்கு இடம் கிடைக்காது. இதற்கு மாறாக பாண்டுங்பாணியில் இரண்டாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று அது விரும்புவதுடன் தனது யோசனைக்கு ஆசிய-ஆபிரிக்கநாடுகளில் ஆதரவைத் திரட்டுவதில் சீனப் பிரதமர் சூ-என்-லாய் முயற்சி செய்துள்ளார். நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டினால் பயன் ஏற்படாது என்று பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் இலங்கைக்கு சமீபத்தில் வந்திருந்தபொழுது வெளிப்படையாகவே அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். இச்சந்தர்ப்பத்தில் சீனப்பிரதமர் இலங்கைக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்நிலையில் நடுநிலைமைநாடுகளின் மகாநாட்டைக் கூட்டும் அமைப்பாளர்களில் ஒன்றான இலங்கைக்குப் பொறுப்பு அதிகம். எந்த நாடுகளின் வற்புறுத்தலுக்கும் தந்திரங்களுக்கும் பணியாமல் தனது நடுநிலைமைக் கொள்கையை இலங்கை சரிவரப் பின்பற்றி வருவது அதற்குப் பெருமைதான்.

இதற்கிடையில் நாட்டின் நடுநிலைமைக் கொள்கையைநாட்டு மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் தெளிவாக்கக்கூடிய நல்ல சந்தர்ப்பம் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அச்சந்தர்ப்பத்தை இனியும் தாமதிக்காது பார்லிமெண்ட் கூடும்பொழுது வெளிவிவகாரக் கொள்கைபற்றிய விவாதத்தை ஆரம்பித்துவைப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

எடுத்த காணிகளை திருப்பிக் கொடுக்கவும்

காணிமந்திரியிடம் தொண்டமான் புகார்

கொழும்பு, வெள்ளி

இந்திய வம்சாவளி பிரஜைகளுக்கென வவுனியாவில் ஒதுக்கப்பட்ட காணிகளை அவர்களுக்கு வழங்க மறுக்கப்படுவது பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவிடம் புகார் தெரிவித்துள்ளார்.

1962-ம் ஆண்டு, காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு, விண்ணப்பம் செய்தவர்கள் நிரந்தரப் பிரஜைகளாகவோ அல்லது பதிவுப் பிரஜைகளாகவோ காணப்பட்ட பின்னரே காணிகள் ஒதுக்கப்பட்டதாகவும், அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களை பண்படுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களை அந்தக் காணியிலிருந்து வெளியேறுமாறு வவுனியா அரசாங்க அதிபர் கேட்டுள்ளதாகவும் திரு. தொண்டமான் தமது கடிதத்தில் மந்திரிக்கு தெரிவித்துள்ளார். இதன் விளைவாக இம்மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாது கஷ்டப்படுவதாகவும், அக்காணிகளை அவர்களுக்கு திருப்பிக் கொடுக்க உத்தரவிடுமாறும் திரு. தொண்டமான் மந்திரியைக் கேட்டுள்ளார்.

இலங்கையரல்லாதவர் சொத்துக்கள் வாங்கமுடியாது

கொழும்பு, வெள்ளி

நிலங்கள், வீடுகள் போன்ற அசையா சொத்துக்களை இலங்கையரல்லாதார் வாங்க முடியாது. அசையாச் சொத்துக்களை இலங்கையரல்லாதார் வாங்குவதை தடைசெய்யும் சட்டத்தை அரசாங்கம் விரைவில் அமுல் செய்யவிருக்கின்றது.

புதிய சட்டத்திற்கான நகல் மசோதாவை காணி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா தயாரித்துள்ளார். மந்திரிசபை அடுத்தமுறை கூடும் பொழுது இப்புதிய சட்டத்தை பார்லிமெண்டில் சமர்ப்பித்து விரைவில் அமுல் செய்வது பற்றி ஆராயப்படும்.

கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் இந்திய வம்சாவளியினர் வசித்து வரும் இடங்களை இலங்கையரல்லாதார் வாங்கி வருவதாகவும், இதைத் தடைசெய்வதற்கு இ புதிய சட்டம் அவசியமெனவும் காணி அமைச்சு அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

தமிழ் ஊழியர் இடமாற்றம்

கொழும்பு, வெள்ளி

மோட்டார் போக்குவரத்து அதிகாரி காரியாலயத்தில் சாரதி லைசென்ஸ் கொடுக்கப்படும் பகுதியில் ஒரு விசித்திரமான சம்பவம் அண்மையில் நடைபெற்றது. இந்தப்பகுதியில் வேலைசெய்யும் தமிழ் ஊழியர் யாழ்ப்பாணம்-மட்டக்களப்புப் பகுதிகளில் சித்தியெய்தும் மனுக்களுக்கே சாரதி லைசென்ஸ் எழுதுவது வழக்கமாகும். இப்பகுதியிலிருந்து மனுச் செய்பவர்கள் தமிழ் பேசுபவர்களே. 1-1-64-ல் இருந்து இந்த வேலை செய்துவந்த தமிழ் ஊழியர், சிங்களத்தில் தான் லைசென்ஸுகள் எழுதப்படவேண்டுமென்ற உத்தரவின் பேரில் லைசென்ஸுகள் எழுதப்படாது கட்டி வைக்கப் பட்டிருந்தன.

அண்மையில் ஒரு மனுதார் இக்கிளைக்கு நேரில் வந்து லைசென்ஸ் பற்றி விசாரித்தபொழுது இந்தத் தமிழ் ஊழியர் மனுவை எடுத்து வேறு சிங்களம் தெரிந்தவரைக் கொண்டு லைசென்ஸ் எழுதுவித்து உதவி மோட்டார் அதிகாரியிடம் கையொப்பம் பெறுவதற்காகக் கொண்டு சென்றபொழுது அந்த அதிகாரி பின்வருமாறு அந்தத் தமிழ் ஊழியருக்கு கூறினாராம் "இது எப்படி முடிந்தது. இவ்வளவு காலமும் உம்மால் செய்ய முடியவில்லை. நான் இங்கே வந்தது சும்மாவல்ல. அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காகத்தான் என்பது நினைவிருக்கட்டும். நான் உம்மைப் பற்றி நன்றாக விசாரித்திருக்கிறேன். நீர் கொஞ்சமாகுதல் சிங்களம் படிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. நான் மேலிடத்தில் உமது விவகாரத்தை எடுத்து என்னால் ஆவன செய்ய முடியும்," அதற்கு அந்தத் தமிழ் ஊழியர் "நேரில் வந்த பொழுது நாம் எமது கடமையை செய்ய வேண்டும் அல்லவா" என்று கூறினாராம்.

மறுநாள் இந்தத் தமிழ்ஊழியர் வேறு கிளைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.

நாவற்குழி கி. ச. தலைவர் கலந்துகொள்வார்

நாவற்குழி, வெள்ளி

நாளை திருக்கோணமலையில் நடைபெறவிருக்கும் ஸ்தலஸ்தாபன தலைவர்கள் மகாநாட்டில் நாவற்குழி கிராமசபை உப தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை கலந்துகொள்வார்.

பிக்குகள் அரசியலில் தலையிடக் கூடாது

மகாநாயக்க பீடாதிபதி கருத்து

கொழும்பு, வெள்ளி

தான் எந்தக் கட்சியையும் சேராதவர் எனவும், ஆட்சியிலிருக்கும் கட்சி, அது சுதந்திரக்கட்சியாகவோ அல்லது வேறெந்தக் கட்சியாகவோ இருந்தாலும் சரி, தவறு விடும் சமயத்தில் அதைச் சுட்டிக் காட்டி, கண்டித்து, திருத்துவதே தனது கடமையாகும் எனவும் மல்வத்தை பீடத்தின் புதிய குருவான வண. அமுனுகம ராஜகுரு விப்பாசி மகாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தூதுக்கோஷ்டி ஒன்று அண்மையில் மல்வத்தை பீட தலைமைக்குருவைப் பேட்டி கண்டது. இத்தூதுக்கோஷ்டிக்கு பௌத்தகாங்கிரஸின் தலைவர் சேர். லலிதா ராஜபக்சா தலைமை தாங்கிச் சென்றார். பௌத்த பிக்குகள் அரசியலில் தலையிடலமா என்று சேர்.ராஜபக்சா பீடாதிபதியை கேட்டபொழுதே அவர் மேற்குறிப்பிட்ட பதிலைத் தெரிவித்தார்.

சாதாரண பௌத்தர்கள் அரசியலில் ஈடுபட்டு தொண்டு செய்துகொண்டிருக்கும் போது பௌத்த பிக்குகள் அரசியலில் தலையிடக் காரணம் எதுவும் இல்லையென்று குறிப்பிட்ட பீடாதிபதி பௌத்த சாசனத்துக்கு அபாயம் ஏற்படும் பொழுதே பௌத்தபிக்குகள் அரசியலில் தலையிடவேண்டுமெனவும் தெரிவித்தார்.

கல்வி சம்பந்தமான வெள்ளை அறிக்கையில் சில குறைபாடுகள் உள்ளதாகவும், வெள்ளை அறிக்கை அமுல் செய்யப்படுவதற்கு முன் இக்குறைபாடுகள் யாவும் திருத்தப்பட வேண்டுமெனவும் மகாநாயக்க தேரோ குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள பௌத்தம் தூயதாக இருந்த பொழுதிலும் மக்கள் ஆன்மீகத்துறையில் ஈடுபாடில்லாத காரணத்தால் அபிவிருத்தியடையவில்லையென்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் மகாயன பௌத்தம் நன்னபிவிருத்தியடைந்து வருவதாகவும் மகாநாயக்கா குரு தெரிவித்தார்.

பெற்றசுதந்திரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு நாட்டின் சகல பகுதி மக்களிடையேயும் ஒற்றுமை அவசியமெனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உத்தியோக மொழிச் சட்ட அமுல் காரணமாக வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர் புதிதாக ஒரு சங்கத்தை ஆரம்பிக்க இருக்கிறார்கள். இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இவ்வார இறுதியில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. கோடீஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் தமிழ் எம். பி. க்களும் கலந்து கொள்வர்.

ஆஸ்பத்திரி சுவீப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

10 E 0572
17 D 0212
11 S 0347
17 D 0539
14 p 0024
12 V 0153
14 O 0779
10 W 0173
13 D 0461
11 N 0292
09 A 0130
09 S 0542
17 Y 0245
10 A 0769
17 A 0691
06 X 0145
17 N 1026
17 J 0807
11 Q 0011
15 N 0187
05 p 0155
16 E 0519
01 A 0507
03 T 0403
09 E 0690

10 H 0836
11 U 0564
06 N 0463
03 B 0682
06 H 0978
06 T 0596
09 O 0271
09 D 0741
02 M 0061
01 N 0791
09 C 0282
20 p 0457
19 B 0012
17 E 0294
01 G 0342
18 V 0992
16 p 0809
12 O 0028
15 B 0486
05 F 0463
11 V 0613
15 G 0957
02 O 0710
09 T 0830
08 G 0123

கார்ப்பரேஷன்கள் பற்றி விசாரிக்க கமிஷன்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தின் கீழ் இயங்கும் கார்ப்பரேஷன்கள் பற்றி விசாரணை செய்வதற்கு கமிஷன் ஒன்று நியமிக்கப்படும். இதில் ஒருவர் மட்டுமே அங்கம் வகிப்பார். கார்ப்பரேஷன்களில் உள்ள ஊழல்களையும், திறமையீனத்தையும் நிவர்த்தி செய்வதற்காகவே இந்தக் கமிஷனை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக்கமிஷன் கூட்டுறவுமொத்த ஸ்தாபனத்தின் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுகள் பற்றியும் ஆராயும்.

அரசாங்க கார்ப்பரேஷன்கள் பற்றி விசாரணை செய்ய 3 எம். பி க்கள் கொண்ட கமிஷன் ஒன்றை நியமிப்பதெனவும், கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் ஊழல்களை விசாரிக்கப் புறம்பான கமிஷன் ஒன்றை நியமிப்பதெனவும் முன்னர் ஆலோசிக்கப்பட்ட பொழுதும் இப்பொழுது ஒருவர் கொண்ட கமிஷனை நியமிப்பதென்ற புதிய முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் நியமித்த பல கமிட்டிகளுக்குத் தலைமை வகித்த ஓய்வு பெற்ற நிரந்தரக் காரியதரிசி ஒருவர் இக்கமிஷனுக்கு நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

உத்தியோக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரான்லி சொய்சாவாலும் அளிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு மாறானவையாய் இருப்பதாலும்;

(4) அத்தீர்மானங்களும் சுற்றறிக்கைகளும் இலங்கையை ஓர் அங்க நாடாகக் கொண்டதான சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் IIIம் இலக்க விதியை மீறுகின்றனவாகையாலும்;

(5) அத்தீர்மானங்களும் சுற்றறிக்கைகளும் அரசகரும மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவதென்ற போர்வையில் சிங்களம் பேசாத அரசாங்க ஊழியர்களுக்கெதிராக நியமனங்கள் இளைப்பாறுதல் ஆகிய விடயங்களில் பாரபட்சம் காட்டுவதற்கான ஒரு முயற்சியாகவிருப்பதனாலும்;

குறிப்பிடப்பட்ட அத்தீர்மானங்களையும் சுற்றறிக்கைகளையும் உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது.

வருடா வருடம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகளின் தலைவர்களடங்கிய கூட்டணியை அமைக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் அந்தத் தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமலையில் நடைபெறும் இந்த மகாநாடு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பகுதிகளில் கூட்டப்பட்டு ஸ்தலஸ்தாபன சபைகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை ஆராய வேண்டுவதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமெனவும் இன்று நடைபெறும் இந்த மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைச் செயல்படுத்த தாம் தயாராக இருப்பதாகவும் திரு. திடவீரசிங்கம் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

“வசீகரமும், திறமையும் பொருந்தியவர்”

மறைந்த ராஜ்குமாரிக்கு ஸ்ரீமதி இந்திரா புகழ்மாலை

புதுடில்லி, பெப். 7

நேற்று புதுடில்லியில் காலமான ஸ்ரீமதி ராஜ்குமாரி அமிர்தகௌரியின் இறுதிச் சடங்கில் மத்திய மந்திரிகள், எம். பி.க்கள், ராஜதந்திரிகள், மற்றும் பல பிரபலஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் உபஜனாதிபதி ஸகிர்ஹுஸைன், பிரதமர் நேரு ஆகியோர் சார்பில் அவரது உடல் மீது மலர்வளையங்கள் வைக்கப்பட்டன.

"வசீகரமும் திறமையும் பொருந்திய ராஜ்குமாரியின் மறைவு தேசத்துக்குப் பெரும் நஷ்டம்" என ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறினார்.

ஸ்ரீமதி ராஜ்குமாரிக்கு மரியாதை தெரிவிக்கும் பொருட்டு நேற்று யூனியன் சுகாதார அமைச்சு மூடப்பட்டது.

ஸ்ரீமதி ராஜ்குமாரி ஏராளமான பொது ஸ்தாபனங்களை நிறுவியும் அதன் தலைவராகப் பணியாற்றியும இருக்கிறார். அகிலபாரத நூற்பாளர்சங்கம், இளம் கிறிஸ்தவமாதர் சங்கம் ஆகியவற்றைநிறுவி அதன் தலைவராகவும் க்ஷயரோகநிவாரண கழகத்தின் தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார். 15 நாடுகளைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கங்கள் அவருக்குப் பதக்கம் அளித்துள்ளன.

“ஆபிரிக்கஇந்தியர் கஷ்டத்திற்கு அவர்களே பொறுப்பு”

ஸ்ரீமதி மேனன் பேச்சு

பம்பாய், பெப். 7

"ஆபிரிக்கநாடுகள் சுதந்திரமடைந்தபின் அங்குள்ள இந்தியர் கஷ்டப்படுவதற்கு அவர்களே பொறுப்பு" என யூனியன் உதவி வெளிவிவகாரமந்திரி ஸ்ரீமதி லட்சுமிமேனன் இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார்.

"கடல் கடந்த இந்தியர்களின் இன்றையநிலை" என்னும் பொருள்பற்றி சர்வதேசக் கருத்தரங்கின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில்பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"கல்விகற்ற, பணம்படைத்த இந்தியர்கள், ஆபிரிக்கமக்கள் சுதந்திரப் போராட்டம் நடத்தியபோது ஒதுங்கி நின்றார்கள். சிலசமயங்களில் அவர்கள் சிறு சலுகைகளுக்காக பிரிட்டிஷ்காரர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனர்.

ஆபிரிக்காவில் குடியேறிய இந்தியர்கள், தங்களை ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாகக் கருத வேண்டும் என இந்திய அரசாங்கம் நீண்ட காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆனால் அந்த உணர்ச்சியை வளர்க்காமல் அவர்கள் தங்களை இந்தியர்களாகவே கருதி வந்திருக்கின்றனர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கல்வித்துறையில் ஆபிரிக்கர்களுக்குச் சமவாய்ப்பு அளித்திருந்தால் எல்லாம் ஆபிரிக்கர்மயமாக வேண்டும் என்ற கோரிக்கை ஏற்பட்டிருக்க மாட்டாது. ஆட்சியின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்குத் தகுந்த தலைவர்களும் தயாராகியிருப்பார்கள்.

ஆபிரிக்காவிலிருந்து திரும்பும் இந்தியர்களுக்கு தங்கக் கட்டுப்பாடுகள், ரிசர்வ்பாங்கு கட்டுப்பாடுகள் முதலியன தளர்த்தப்படமாட்டா. அவர்களில் சிலர் இந்தியாவிலுள்ள தமது மூலதனத்தை எடுத்துச் செல்ல விரும்புகின்றனர். இது சாத்தியப்படாவிட்டால், அந்த மூலதனத்தை அவர்கள் பிரிட்டனுக்காவது அனுப்பிவிட முயற்சிக்கிறார்கள். இது தேசாபிமானமா எனக் கேட்கிறேன். பர்மாவில் வசிக்கும் இந்தியர்கள் அரசாங்கத்தின் விதிகளைமீறி இந்தியாவுக்குப் பணம் அனுப்புகிறார்கள். சில சமயங்களில் தங்கம் முதலிய பொருட்களை இந்தியாவுக்குக் கடத்திக் கொண்டு வருவதற்காக பர்மா யாத்திரீகர்களுக்கு அவர்கள் லஞ்சம் அளிக்கிறார்கள்" என்றும் ஸ்ரீமதி லக்ஷ்மி கூறினார்.

“கானா அரசாங்கத்தின் தூண்டுதலே காரணம்”

ஆக்ரா ஆர்ப்பாட்டம் குறித்து அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், பெப். 7

கானா தலைநகர் ஆக்ராவில் உள்ள அமெரிக்க ஸ்தானிகராலயத்துக்கு வெளியே நடைபெற்ற ஆர்ப்பாட்டம் கானாவின் தூண்டுதலினாலேயே ஏற்பட்டது என அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்தது.

இது சம்பந்தமாக அமெரிக்கா தெரிவித்த ஆட்சேபத்துக்கு இன்னும் கானா அரசாங்கம் பதில் அளிக்கவில்லை என்று ராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

வாஷிங்டனிலுள்ள கானா தூதர் அழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் பற்றி பலவந்த ஆட்சேபனைக்குறிப்பு அவரிடம்வழங்கப்பட்டது.

அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கானா அரசாங்கம் தான் ஊக்குவித்திருக்க வேண்டும் என அந்த ஆட்சேபனையில் கூறப்பட்டதாக ராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

இக்கட்டத்தில் 'கானாவுக்கு அளிக்கப்படும் அமெரிக்க உதவி பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

சீனப்பிரதமர் சூ-என்-லாய் கானாவுக்கு விஜயம் செய்ததற்கும், இந்த ஆர்ப்பாட்டத்திற்கும் தொடர்புண்டா எனக் கேட்கப்பட்டதற்கு அவர் பதிலளிக்க மறுத்து விட்டார்.

கலிங்கா பரிசு

புவடில்லி, பெப். 7

நேற்று மாலை புதுடில்லியில் நடைபற்ற ஒரு நிகழ்ச்சியில் அமெரிக்க விஞ்ஞான எழுத்தாளர் ஜெரால்ட்பீல்டுக்கு கலிங்கா பரிசு வழங்கப்பட்டது. இப் பரிசைப் பெறும் 11-வது நபர் இவராகும்.

வாக்காளர் தந்திரம்

கோவை, பெப். 7

கோவையில் ஒரு தெருவில் அபேட்சகர் ஒருவர் வாக்காளர்களுக்கு தாம்பூலம், சந்தனம், புஷ்பம் வைத்து தமக்கு வாக்களிக்குமாறு அழைத்தார்.

‘இந்தியத் திருநாள்’

கான்ஸாஸ் பல்கலைக் கழகம் ஏற்பாடு

மனஹாட்டன்,
கான்ஸாஸ், பெப். 7

இங்குள்ள கான்ஸாஸ் அரசாங்கப் பல்கலைக்கழகத்தில் நாளை நடத்தத் திட்டமிட்டுள்ள முதல் 'இந்தியத் திருநாள்' நிகழ்ச்சியில் அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதர் பி. கே. நேரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

'இந்தியத் திருநாள்' இனி ஆண்டுதோறும் கொண்டாடப்படும். நடப்பு ஆண்டு ஏற்பாடுகள் பற்றி பல்கலைக்கழகத் தலைவர் ஜேம்ஸ் ஏ. மக்கெய்ன் அறிக்கையில், பல்கலைக்கழகத்தில் படிக்கும் சுமார் 200 இந்திய மாணவர்களையும் தூதர் நேரு சந்திப்பார் என்றும், வெள்ளி மாலை நடைபெறும் ஒரு விருந்து உள்பட மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார் என்றும் தெரிவித்தார்.

பெப்ரவரி 7-ந் திகதி இந்தியத் திருநாள் என்று தலைவர் மக்கெய்ன் அறிவித்துள்ளபோதிலும், வாரம் முழுதுமே பல்கலைக்கழகத்தில் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். வர்ணப் படங்கள் காட்டுதல், இந்திய நாட்டு ஓவியங்கள் கலைப் பொருள்கள காட்சி, இசை நிகழ்ச்சிகள் உள்பட இந்தியக் கலை நிகழ்ச்சிகள் முதலியன நடக்கும்.

வாரத்தின் சிறப்பு நிகழ்ச்சி, மூன்று கருத்தரங்குகள் ஆகும். புகழ்பெற்ற இந்தியக் கவிஞரும் பண்பாட்டுத்துறைத் தலைவருமான ரவீந்திரநாத் தாகூர் பற்றியும், இந்தியப் பொருளாதாரம் பற்றியும், "46 கோடி பேருக்கு உணவளித்தல்" என்னும் பொருள் பற்றியும் கருத்தரங்குகள் நடைபெறும்.

முன்பு இந்திய அரசாங்க உணவு மந்திரியாக இருந்த எஸ். கே. பாட்டீல் சென்ற கோடையில் கான்ஸாஸ் பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தபோது தெரிவித்த ஒரு யோசனையின் விளைவாக உருவாகியது. 'இந்தியத் திருநாள்' கொண்டாடும் கருத்து என்று தலைவர் மக்கெய்ன் தெரிவித்தார்.

நல்லவர் இவரே!

சென்னை, பெப் 7

சென்னையில் அரசாங்க பஸ் கண்டக்டர் ஒருவர் பொதுமக்களிடம் எரிச்சல் கொள்ளாமல், கூட்டம் எவ்வளவு அதிகம் உள்ளபோதிலும் பொருட்படுத்தாமல், கண்ணிய மிக்கநடத்தையுடன் அவர்களுடன் பழகுவது பற்றியும், அதே நேரத்தில் பிரயாணிகள் அவருக்கு மதிப்புக் கொடுத்துள்ளது பற்றியும் அறிவிக்கப்படுகிறது.

இவர் நகரில் பஸ் நிற்குமிடத்தில் பஸ்கள் வருமுன்பாக டிக்கெட் கொடுக்கிறார், மிக விரைவாகவும் டிக்கெட் கொடுக்கிறார். மிகச் சுறுசுறுப்பாகவும் காணப்படுகிறார். பஸ்கள் அவை நிற்கவேண்டிய இடத்தில் நிற்குமாறு கவனித்துக் கொள்கிறார். "கியூ"வை மீறுபவர்களிடம் அவர்கள் செய்யும் தவறை தன்மையுடனும், மரியாதையுடனும் எடுத்துச்சொல்லி உணரும்படி செய்கிறார். இவர் ஆற்றும் சிறந்த பணியைப் பாராட்டி பிரயாணிகள் தாமாகவே மனமுவந்து ஒரு பணமுடிப்பை அவருக்கு கொடுத்துள்ளனர்.

சைப்ரஸில் புதிய கைகலப்பு: 13 பேர் மாண்டனர்

பாதுகாப்புசபை பரிசீலிக்கும்

நிக்கோஸியா, பெப். 7

சைப்ரஸில் புதிதாக ஏற்பட்ட பலாத்கார சம்பவத்தில் 6 கிரேக்கர்களும், 7 துருக்கியர்களும் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது. ஏராளமானோர் காயமடைந்தனர். நிக்கோஸியாவுக்கருகேயுள்ள கிராமங்களில் சண்டை நடைபெற்றதாயும், ஏராளமான வீடுகளுக்கு தீ மூட்டப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் துருப்புக்கள் அங்கு ரோந்து சுற்றி வருகின்றனர்.

கிரேக்கர் ஒருவரின் கார் தாக்கப்பட்டு, 2 கிரேக்கர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற ஒரு செய்தி கிடைத்ததைத் தொடர்ந்து இச்சண்டை ஏற்பட்டது.

இதற்கிடையில், புதிய யோசனை ஒன்றை பிரிட்டன் சைப்ரஸ் அதிபருக்குத் தெரிவித்திருப்பதாயும், இதற்கு அமெரிக்காவின் அங்கீகாரம் இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

வசைப்ரஸ்நிலைமைபற்றி பாதுகாப்பு சபை ஆலோசனை நடத்தும் என ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண் அறிவித்திருக்கிறார்.

ஆயிரக் கணக்கானோர் புனித சின்னத்தை தரிசித்தனர்

காஷ்மீரில் பொதுவிடுமுறை

ஸ்ரீநகர், பெப். 7

நேற்று காட்சிக்கு வைக்கப்பட்ட புனித கேசத்தை ஆயிரக்கணக்கான காஷ்மீர் மக்கள் பக்தியுடன் தரிசனம் செய்தனர். பிரதமர் ஷம்சுதீனும் அப்போது பிரசன்னமாயிருந்தார். மன்னர் கரன்சிங் 3000 ரூபாய் காணிக்கை அனுப்பியிருந்தார். தரிசனத்தை முன்னிட்டு காஷ்மீர் பள்ளத்தாக்கில் நேற்று பொதுவிடுமுறை அளிக்கப்பட்டது.

புனித சின்னம் காணாமற் போனதைத்தொடர்ந்து கைது செய்யப்பட்டிருந்த 46 பேர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

காஷ்மீரில் பாகிஸ்தானின் சட்ட விரோத ஆக்கிரமிப்பு அகலவேண்டும் என பக்ஷி குலாம் முகம்மது கூறினார். காஷ்மீர் மக்களின் உண்மையான உணர்ச்சிகளை திரு. சக்ளா பாதுகாப்புச் சபையில் வெளியிட்டிருப்பதாக அவர் பாராட்டுத் தெரிவித்தார். ஜனநாயகத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் நம்பிக்கை கொண்டவர்கள் ஐக்கியமாகச் செயல்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

போர்ணியோ

தாய்லாந்து மேற்பார்வையிடும்

நியூயோர்க், பெப். 7

வடபோர்ணியோ எல்லையில் யுத்த நிறுத்தத்தை மேற்பார்வையிட ஐ. நா. தாய்லாந்தை நியமித்திருக்கிறது. இதற்கிடையில் நேற்று பாங்காக்கில் கூடிய மலேஷியா, இந்தோனேஷியா, பிலிபைன்ஸ் வெளிநாட்டு மந்திரிகள் பலவிஷயங்களில் உடன்பாடு கண்டிருப்பதாக தாய்லாந்து வெளிவிவகார மந்திரி அறிவித்தார். இது பற்றித் திருப்தியேற்பட்டிருப்பதாயும், தாய்லாந்து யுத்த நிறுத்த மேற்பார்வையாளர்களில் பெரும்பாலோர் சிவிலியன்களாய் இருப்பவர்கள் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீமதி காந்தி

பம்பாய், பெப். 7

1964-65-ம் வருட நியூயோர்க் உலகவிழா துவக்க நாளான ஏப்ரல் 22-ம் திகதி பொருட்காட்சியில் கலந்து கொள்ளும் எல்லா வெளிநாட்டினர் சார்பிலும் ஸ்ரீமதி இந்திராகாந்தி உரை நிகழ்த்துவார். விழாத்தலைவரின் அழைப்பை ஸ்ரீமதி காந்தி ஏற்றுக் கொண்டதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுடன் அவர் விழாவில் கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டது.

“ஆங்கிலத்தை கைவிடோம்”

—முதன்மந்திரி

கோயமுத்தூர், பெப .7

"சர்வகலாசாலைகளில் கால வரையறையின்றி ஆங்கிலமே போதனா மொழியாக இருக்கும். ஆங்கிலம் காலவரையறையின்றி நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதை எப்படி விடமுடியும்?" என்று முதன்மந்திரி பக்தவத்சலம் கூறினார்.

கட்சியை கலைக்க தயார். ஆனால்.....

மைசூர், பெப். 7

சகலவிதமான மறைமுகவரிகளையும் பிரதமமந்திரி ரத்துச் செய்வாரானால் சுதந்திரக்கட்சியைக் கலைக்க தாம் தயார் என ராஜாஜி கூறினார்.

ராஜாஜி கருத்து

பெங்களூர், பெப். 7

பெண்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சியளிப்பது நல்லது என்றும் அவர்களுக்கு ஒருவகை பாதுகாப்பு அவசியமென்றும் ராஜாஜி கூறினார்.

பஸ் தேசிய மயம்

புதுடில்லி, பெப். 7

அடுத்த 3 ஆண்டுகளில் பஸ் போக்குவரத்து தேசியமயமாக்கப்படும் என உத்தர பிரதேச அரசாங்கம் அறிவித்துள்ளது.

கிரிக்கெட்

அடிலெய்ட், பெப் 7

ஆஸ்திரேலியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையே 5வது கிரிக்கெட் டெஸ்ட் இன்று ஆரம்பமாகியது.

●

நேற்று நாகபுரியில் கூட்டுக் கோஷ்டிக்கும், எம். சி. சி. கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கேரளத்தில் பொதுத் தேர்தல்

எர்ணாகுளம், பெப். 7-

கேரள ராஜ்யத்தில் அடுத்த வருடம் பெப்ரவரியில்பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும், அவசியமானால் இன்னும் முன்னதாகவே தேர்தல் நடைபெறுமென்றும் பிரதம தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் அறிவித்தார்.

சைக்கிள் டயர்கள் விரைவில் கிடைக்கும்

கொழும்பு, வெள்ளி

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சைக்கிள் டயர்களை மிக விரைவில் இறக்குமதிசெய்யவிருக்கிறது. சைக்கிள் டயர்களை உற்பத்தி செய்ய விரும்பும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் ஒரு கம்பனி மட்டுமே சைக்கிள் டயரை உற்பத்திசெய்கிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் உடனே சைக்கிள்டயர் இறக்குமதி செய்ய வேண்டுமென்றும் சைக்கிள் டயர்களை உற்பத்திசெய்ய விரும்பும் கம்பனிகளுக்கு அனுமதிவழங்கப்பட வேண்டுமென்றும் வாழ்க்கைச்செலவு சம்பந்தமான மந்திரிசபை உப கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த உபகமிட்டிக் கூட்டம் நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தலைமையில் நடைபெற்றது. உணவு, விவசாய கூட்டுறவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவரது நிரந்தரக் காரியதரிசி திரு பி. மகாதேவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் சீமெந்து, எஃகு தட்டுப்பாடுபற்றியும் ஆராயப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இளம் பெண் பரிதாப மரணம்

சுழிபுரம், வெள்ளி

சில்லாலை கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சாந்தை என்னும் கிராமத்தில் அண்மையில் திருமணம் புரிந்த 16 வயதையுடைய சரவணை பெண் பூமணி வயல் கிணற்று நீரில் விழுந்து மரணமான பரிதாபகரமான சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். ரி. நடராசா மரண விசாரணை நடத்தினர். தற்செயலாக ஏற்பட்ட சம்பவத்தினால் மரணமானார் என தீர்ப்பளிக்கப்பட்டது.

நீவின் வருகிறார்

புதுடில்லி, பெ. 7

பர்மிய புரட்சிச்சபைத் தலைவர் ஜெனரல் நீவின், நாளை புதுடில்லிக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொள்கிறார். குறுகியகால முன்னறிவித்தலின் பேரில் திரு. நேருவைத் தனிப்பட்டமுறையில் சந்திக்க அவர் வருகிறார். நேருவின் உடல்நிலைபற்றி அவர் கவலையடைந்திருப்பதாக்க கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் வேலைபார்க்க ஆர்வம்

கொழும்பு, வெள்ளி

வெளி நாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களில் சேவை புரிய விரும்பி மனுச் செய்திருந்த 350 விண்ணப்பதாரர்களின் மனுக்களை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பரிசீலனை செய்து வருகிறது.

கடந்த இரு வாரகாலத்தில் சுமார் 200 பேர் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றினார்கள். அடுத்த இரு வாரங்களில் மிகுதிப்பேர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

"மொழிச் சமத்துவமே எங்கள் கொள்கை"

சுகாதார தொழிலாளர் சங்கக் காரியதரிசி அறிக்கை

கொழும்பு, வெள்ளி

"தனிச் சிங்களக் கொள்கையை அரசாங்க சுகாதாரசேவையாளர் சங்கம் ஆதரித்தமையாலேயே அச் சங்கத்திலிருந்தும் பிரிந்து அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கத்தை அமைத்தோம். அக்கொள்கையை ஆதரிக்கும் எச்சக்திகளுடனும் தொடர்பு வைக்க மாட்டோம் எமது கொள்கை அன்றும், இன்றும், என்றும் மொழிச் சமத்துவ உரிமையேயாகும். அதற்காகப் போராட எப்பொழுதாவது தயங்கமாட்டோம்."

இவ்வாறு அகில இலங்கைச் சுகாதார இலாகா தொழிலாளர் சங்கப் பொதுச் காரியதரிசி திரு. எஸ். குணவர்த்தன பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எமது சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையைப்பற்றிச் சில சிங்கள வகுப்புவாதச் சங்கங்கள் வீண் பிரசாரஞ் செய்கின்றன. யாழ்ப்பாணச் சுகாதார அத்தியட்சகரின் நிர்வாகம் பற்றி நாம் கண்டிக்கின்றோம். சிறு சேவையாளரின் ஜீவாதார உரிமை பறிபோகும் போது கண்டிக்காதிருக்க முடியாது.

தமிழ் உரிமைக்காக முன்னின்று எம்மோடு தோளோடு தோள்நின்று போராடிய சில தமிழ்த் தோளர்கள் எம்மைப் பிரிந்து தனிச் சிங்களக்கொள்கைக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள சங்கத்துடன் சேர்ந்துநிற்பதற்கு நாம் வருந்துவ

(5-ம் பக்கம் பார்க்க)

கந்தையாவுக்கு பாராட்டு

பருத்தித்துறை, புகன்

பிரிட்டனைச்சேர்ந்த பிரபல விஞ்ஞானியும் உடுப்பிட்டியைத் தாயகமாகக்கொண்டவருமான கலாநிதி க. கந்தையாவுக்கு பருத்தித்துறை ரோட்டறிக் கிளப்பினர் வரவேற்பொன்றளித்து கௌரவித்தனர்.

ரோட்டறிக் கிளப்பின் சார்பில் 'அணுவும் சமாதானமும்' என்னும் பொருள்பற்றி ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டதில் திரு. கந்தையா சொற்பெருக்காற்றினார்.

ரோட்டறிக்கிளப்பின் தலைவர் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா திரு. கந்தையாவின் திறமையைப் பாராட்டியதுடன், திரு. கந்தையாவால் தமிழர் சமுதாயமும், தமிழும் மட்டுமல்ல வடமராட்சிப்பகுதியும் இலங்கையுமே பெருமையும் புகழும் உலகஅரங்கில் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

ராஜசிங்காவின் சிலை நிறுவ ஆலோசனை

கண்டி, வெள்ளி

காலனி ஆட்சி காலத்தில் கண்டி நகரில் நிறுவப்பட்ட இரு சிலைகளை அகற்றுவதற்கு கண்டி எம். பியும் மேயருமான திரு. ஈ. எல். சேனநாயக்கா ஆலோசித்துவருகிறார். தலாதாமாளிகைக்கு முன்னர் நிறுவப்பட்டுள்ள முன்னைநாள் கவர்னர் திரு ஹென்றி வார்டினதும், பொக்விஸ் தோட்டத்தில் போயா யுத்தத்தை ஞாபகப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள போர்வீரர் சிலையையும் அகற்றுவதற்கு மேயர் உத்தேசித்து வருகிறார்.

இச்சிலைகளை அமைத்தவர்களின் இலட்சியத்தை பாழடிக்காத வகையில், இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் காலனி ஆட்சி காலத்தில் நிறுவப்பட்ட சிலைகளை அகற்றி நூதனசாலைகளில் வைத்தது போல இச்சிலைகளையும் அகற்றி கண்டி நூதனசாலையில் பொதுமக்களின் பார்வைக்கு வைப்பது பற்றி மேயர் ஆலோசித்துவருகிறார்

ஹென்றி வார்டின் சிலை உள்ள இடத்தில் கண்டி ஏரியைக் கட்டுவித்த ராஜசிங்க மன்னனின் சிலையை அமைப்பதே உசிதமெனவும் மேயர் கருதுகிறார்.

"என் முழுத் திறமையையும் காட்டி வேலை செய்து வருகிறேன் சார்...!"
"இவ்வளவு தான் உன் முழுத் திறமை என்றால் போதவே போதாது!"
HORLICKS
MALTED MILK
THE IDEAL FOOD DRINK FOR ALL AGES
ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:

எவ்வளவு பெரிய ஏமாற்றம்! எனக்கு உத்தியோக உயர்வுடன் வேறு ஊருக்கு மாற்றலும் சமீபத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தேன். என் போதாத காலம், எனக்குத் திறமை போதாது என்று அதிகாரி முடிவு கட்டி விட்டாரே!

அன்றிரவு என் மனைவியிடம் தெரிவித்தேன்: "உத்தியோக உயர்வும் இல்லை; வேறு ஊருக்கு மாற்றலும் கிடையாது." அவளுக்கும் பெருத்த ஏமாற்றம் தான்! முணுமுணுக்க ஆரம்பித்தாள். எனக்கு எரிச்சலாய் வந்தது! "நீ வேறு கூச்சல் போடாதே—ஆபீஸில் கேட்ட பேச்சே போதும்," என்றேன்.

என் மனைவி சொன்னாள்: "உத்தியோக உயர்வு கிடக்கட்டும், என் கவலை உங்கள் உடம்பைப் பற்றித் தான். சதா சிடுசிடுப்பும் எரிச்சலுமாய் கோபப்படுகிறீர்கள்! எனக்காகவாவது உங்கள் ஆபீஸ் டாக்டரைப் பார்க்கக்கூடாதா?"

என் மனைவியின் திருப்திக்காக ஆபீஸ் டாக்டரைக் கேட்டேன். டாக்டர் சொன்னார்: "நீண்ட நேர உழைப்பும் மனக்கவலையும் உங்கள் சக்தியை விரயமாக்கிவிட்டன. இழந்த சக்தியை மீட்டுத் தர உங்களுக்கு அதிகரித்த போஷாக்கு தேவை! தினந்தோறும் ஹார்லிக்ஸ் பருகுங்கள்."

பலவீனர்களுக்கு உடல் தேற டாக்டர்கள் ஹார்லிக்ஸ் அருந்தும்படி சிபாரிசு செய்வது நானறிந்ததே; ஆனால், ஹார்லிக்ஸ் அருந்துவதனால் எனக்குப் பலன் கிடைக்கும் என்று நான் நினைத்ததில்லை. ஆனால் என் மனைவி விடாப்பிடியாக எனக்கு ஹார்லிக்ஸ் அளித்து வந்ததில் எவ்வளவு நல்ல பயன் கிட்டியது!

ஹார்லிக்ஸ் உண்மையிலேயே நல்ல பலனை அளித்தது! பரிசுத்தமான பாலும், கோதுமை மாவு, மால்டெட் பார்லி இவற்றின் சத்துக்கள் சேர்ந்த ஹார்லிக்ஸ் பருகி விரைவிலேயே அதிக சக்தியையும் சுறுசுறுப்பையும் பெற்றேன். சீக்கிரத்திலேயே நான் விரும்பிய உத்தியோக உயர்வும் இடமாற்றமும் கிடைத்தன! ஹார்லிக்ஸுக்கு நன்றி! நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

சனி 8-2-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் அரங்கு, 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை.

இரவு 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-00 பாட்டு — மகாராஜபுரம் வி. சந்தானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — இலக்கிய விமரிசனம் — எஸ். தனஞ்ஜெயராஜசிங்கம், 9-30 வயலின் — ஸ்ரீதேவி பத்மநாதன், 10-00 நேயர்விருப்பம்.

ஞாயிறு 9-2-64

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த போதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — பி. இளையதம்பி, 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 தாளவாத்தியக்கச்சேரி.

இரவு 6-45 பாட்டு — தயாளசுந்தரம் பரந்தாமன், 7-45 நாடகம் 'செல்லப்பிள்ளை' — எம். மகாலிங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மாதர்விருப்பம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

திருச்சி

சனி 8-2-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 எஸ். தக்ஷிணாமூர்த்தி — வயலின்.

பகல் 1-00 பிள்ளைக்கனியமுது, 1-20 கதம்பம் 1-50 வாத்திய இசை, 2-10 எஸ். தக்ஷிணாமூர்த்தி — வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்தியஇசை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 திறந்த கண் — நாடகம் வாசவன் எழுதியது, 8-00 இசைக்கோவை — வீணை, 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி — எம். எஸ். சுப்புலக்ஷ்மி — பாட்டு.

ஞாயிறு 9-2-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 ஜி ஸ்ரீனிவாசராகவன் — பாட்டு, 8-15 டி. வி. ரத்தினம் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 காரைக்குடி வி. சங்கரன் — பாட்டு.

மாலை 5-15 ஜி ஸ்ரீனிவாசராகவன் — பாட்டு, 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 கொட்டுமுரசே — சித்திரம், 7-45 சேலம் எஸ். நீலா — பாட்டு, 8-45 வாத்திய இசை, 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 பத்மாவதி பரிணயம் — சங்கீத உபந்நியாசம்.

கோரிக்கைக்கு எதிர்ப்பு

கொழும்பு, வியாழன்

நோயாளரின் அறைகளைக் கூட்டுதல் போன்ற கடமைகளை தாதிகள் செய்ய வேண்டுமெனச் சுகாதார இலாகாவினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையை எதிர்ப்பதெனவும் தேவைப்படின் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பதெனவும் தாம் செய்த தீர்மானத்திற்கு ஆதரவு கோரியதை அகில இலங்கைச் சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம் நிராகரித்து விட்டது.

இதுபற்றி ஆலோசனை செய்த அகில இலங்கைச் சுகாதார இலாகா தொழிலாளர் சங்க நிர்வாகசபை தாதிகளின் கோரிக்கையை நிராகரிப்பதுடன் தமது சங்கத்தின் கடந்த வருடாந்தக் கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா கூறியது போல் டாக்டர்கள் கூடத் துடைப்பக் கட்டை பிடிக்கத் தயாராயிருத்தல் வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்டித் தாதிகள் சங்கத்திற்கு எழுதவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

வாட் பணியாளர்களும் உதவித் தாதிகளும் தராதரமிருந்தும் பின் தாதிகளாக எடுக்கப்படலாமென்ற திட்டத்தைச் சுகாதார இலாகா கொண்டுவந்த பின்பே இவ்விதம் தாதிகள் வற்புறுத்தப்படுகின்றனரென்ற தாதிகள் சங்கப் புகாரும் ஆதாரமற்றதாக நிராகரிக்கப் பட்டது.

"மொழிச் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன், எமது யாழ்ப்பாணக் கிளையின் நடவடிக்கைகளுக்கு எமது பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுக்கிறோம்.

தனிச் சிங்களமொழி அமுலினால் பாதிக்கப்படும் எந்தச் சிறு சேவையாளருக்காகவும் எமது ஆதரவைக் கொடுத்து அவர்களின் உரிமையை நிலை நாட்ட வேண்டிய நடவடிக்கைகள் எடுப்போமென்று உறுதிப்படுத்துகிறேன்.

மில்க்வைற்
நீல
சவுக்காரம்
★
சவுக்காரம்
வாங்கும்
போது
மில்க்வைற்
நீல
சவுக்காரம் என்று கேட்டுவாங்குங்கள்.
இது ஒரு சிறந்த தயாரிப்பு.
மில்க் வைற்
நீல
சவுக்காரம் ஒன்றே
உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.



"துப்பாக்கிகள் தமிழருக்கு மட்டும் தேவையில்லையா?"

இ. தொ. கா. கேள்வி

கொழும்பு, வெள்ளி

தோட்டப் பகுதியில் அரசாங்கத்தின் நடவடிக்கை, நாம் அவசரகால நிலைமையின் கீழ் இப்பொழுது இருந்து வருவது போன்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. குறிப்பிட்ட சில பெயர்போன வகுப்புவாதிகளின் பொறுப்பற்ற, ஆதாரமற்ற பேச்சைத் தொடர்ந்து இலங்கை இந்திய வம்சாவளியினரின் துப்பாக்கிகளைத் திருப்பி ஒப்படைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அவர்களது லைசென்ஸ்களைப் புதுப்பிக்கவும் மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தகவல் பகுதி சமீபத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதற்கு மாறாக இப்பகுதிகளிலுள்ள சிங்கள மக்கள் துப்பாக்கிகளை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

தோட்டப் பகுதியிலுள்ள மக்களின் புகார்களைத் தொடர்ந்து எம். பி. தொண்டமான் இப்பகுதிக் காரியாதிகாரியுடன் இதுசம்பந்தமாகத் தொடர்புகொண்டார்.

அங்கிருந்து கிடைத்த பதில் தெளிவற்றதாகவே இருந்தது. அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் நீதியை நிலைநாட்டவில்லை. பஹத்தஹேவா கெட்ட காரியாதிகாரி 'தொழிலாளர் துப்பாக்கி உபயோகிப்பதற்கான லைசென்ஸ்கள் என்னால் வழங்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட விஷயத்தில் கருத்துவேறுபாடு கொண்டிருந்தால் தயவுசெய்து கண்டி அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ளலாம்' எனத் தெரிவித்துள்ளார்.

தமது துப்பாக்கிகளைத் திருப்பி ஒப்படைக்கவேண்டுமென நான் கட்டளையிடவில்லை. ஆனால் ஒருவர் தாமாகவே தமது துப்பாக்கியைத் திருப்பி ஒப்படைத்தால் இது ஒப்படைக்கப்பட்டதற்கான பற்றுச்சீட்டு காரியாலயத்திலிருந்து கொடுக்கப்படும் இவ்வாறும் குறிப்பிட்ட காரியாதிகாரி தெரிவித்திருந்தார்.

காரியாதிகாரியின் இவ்வித கூற்றுப்படி மக்கள் தாமாகவே துப்பாக்கிகளைத் திருப்பி ஒப்படைத்துவிட்டுப் பின்னர் லைசென்ஸைப் புதுப்பிக்க மறுத்துவிட்டதாகவும், தாம் துப்பாக்கிகளைப் பாதுகாப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொண்டு பற்றுச்சீட்டு கொடுத்ததாகவும் கருதப்படுகின்றது.

அவர் தமது பதிலின் இறுதியில், குறிப்பிட்ட ஒரு இனத்தார் என்ற காரணத்துக்காக லைசென்ஸ்கள் புதுப்பித்துக் கொடுக்கப் படுவதில்லையெனக் குற்றம் சாட்டப்படுவதில் உண்மையில்லையென்று திறமையாக முடித்திருக்கிறார்.

நுவரெலியா அரசாங்க அதிபர் தோட்டத் தொழிலாளர்களுக்கு அனுப்பியுள்ள கட்டளையில் 10 நாட்களுக்குள் துப்பாக்கிகளைத் திருப்பி ஒப்படைக்குமாறு அறிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்கு லைசென்ஸ்கள் புதுப்பிக்கப்பட்டுத் துப்பாக்கிகள் அனுப்பியும், தமிழ் மக்களுக்கு அனுப்பப்படாது விடப்பட்டதும் எதற்காக எனக் கேட்கவிரும்புகின்றோம்.

வேண்டுமென்றே நடந்துகொள்ளும் இவ்வித நடத்தையால் அரசாங்கம் சமாதானமாக வாழும் மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவிக்க விரும்புவதுபோல் தோன்றுகிறது.

கோண்டாவில் சிசுக்கொலை சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தனது மகளின் பிள்ளையைக்கொலை செய்தாரென்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காகப் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து வரும் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர் மீது கொலைக் குற்றச் சாட்டுச் சுமத்தப்படலாம். இம்மாதம் 19-ம் திகதி வரை குற்றச்சாட்டுப் பத்திரம் கோப்பாய் பொலிசார் தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டபிள்யு. அரசுவால்டன் அவகாசம் கொடுத்துள்ளார்,

கோப்பாய் பொலிஸ் அதிகாரி திரு. சி. இராசநாயகம் பிராசிகியூஷன் தரப்பிலும், திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. சி. கணேசலிங்கம் சந்தேக நபர் சார்பிலும் ஆஜரானர்.

சைக்கிள் டயர் தட்டுப்பாடு

நல்லூர், வெள்ளி

வடபகுதியில் சைக்கிள் வைத்திருப்பவர்கள் சைக்கிளுக்குரிய டயர்கள் கிடைக்காமல் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள் டயர் தட்டுபாடு கடந்த சில மாதங்களாகவே நீடித்துவருகிறது. வெளிநாடுகளிலிருந்துடயர்கள் இறக்குமதி செய்யப்படுவது தடை செய்யப்பட்டதிலிருந்தே டயர் தட்டுப்பாட்டு நிலைமை நீடித்துவருகிறது. இலங்கையில் தயாராகும் டயர்கள் இங்கு கிடைப்பது மிகவும் அரிதாகவுள்ளது.

வடபகுதியில் சில இடங்களில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட டயர்கள் இரட்டிப்பான விலையில் விற்கப்படுவதும் சைக்கிள்காரருக்கு பெரிதும் கஷ்டத்தை உண்டு பண்ணியுள்ளது.

ஒருநாள் ஓய்வு

மருத்துவ தாதிகளுக்கு

கொழும்பு, வியாழன்

இதுவரைவாரலீவுஇல்லாது தொடர்ச்சியாக கடமையாற்றி வந்த கிராம மருத்துவத் தாதிகள் எதிர் காலத்தில் 15 நாட்களுக்கு ஒருநாள் ஓய்வு பெறுவதற்கு உரிமையுடையவர்களாகின்றனர்.

கிழமைக்கு ஒருநாள் ஓய்வு சகல தொழிலாளிகளுக்குமிருக்க கிராம மருத்துவத்தாதிகள் மட்டும் இச்சலுகையற்றவர்களாக இருந்து வந்ததை எடுத்துக் காட்டி அச்சலுகை அவர்களுக்கும் கொடுபட வேண்டுமென்று அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க சுகாதார இலாகா மருத்துவ தாதிகளுக்கு இச் சலுகையை அளித்துள்ளது. இதுபற்றி சகல அரசினர் வைத்தியத்துறைத் தலைவர்களுக்கும் ஒரு சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

வைத்தியர்கட்கு வரிவிதிப்பு

பருத்தித்துறை, வெள்ளி

வைத்தியர்கட்கு வரிவிதிக்கும் உத்தேசத்தை ஆட்சேபித்து தாம் அனுப்பிவைத்த மகஜரின் சார்பில் வடமராட்சி தமிழ் வைத்தியர் சங்கம் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசாவைப் பேட்டி கண்டு சங்கத்தின் கருத்தைத் தெரிவித்தது.

வைத்தியர் சங்கத் தலைவர் திரு. வி. குமாரசாமியும் காரியதரிசி திரு. க. அருளானந்தமும் தலைவருடன் நடாத்திய இப் பேட்டியின் போது உப தலைவர் திரு. வே. நாகநாதனும் சமுகம் அளித்திருந்தார்.

இந்த வரிவிரிப்புச் சம்பந்தமாக அடுத்து வரும் நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் படலாம் எனத் தெரியவருகிறது.

School of Technology
JAFFNA
Radio Servicing Theory

Course preparing for City & Guilds of London Institute Examination in May 1965 - commences March 2, 1964. Candidates must have reached G. C. E standard in English, Mathematics and Physics.

Apply immediately to:
Director.

வரி விளம்பரம்

காணாமல் போயிற்று

3-2-64 திங்கட்கிழமை பகல் 1 மணியளவில் பெரியகடை வான் நிலையத்திலிருந்து புறப்பட்ட வானில் முக்கியமான உறுதிப்பத்திரங்கள், நோட்டுகள், மூக்குக்கண்ணாடி முதலியன உள்ள தோளில் மாட்டும் கன்வஸ் பை தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் ஆஸ்பத்திரி வீதி, வை. சி. சி. கு. தேநீர்க் கடையில் கொடுத்தால் தகுந்த பரிசு வழங்கப்படும். 1941

கிளிநொச்சியில்
விஷ வைத்தியம்

"2-ம்வாய்க்கால் ஆயிரம்ஏக்கரில் வசிக்கும் A. M. உக்குபண்டா ஆகிய நான் தெரிவிப்பது:- எனது 12 வயதுள்ள மகள் குஞ்சிமெனிக்காவுக்கு 10-12-63 ல் இரத்தப்புடையன் பாம்பு கடித்து ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனேன். அங்கு முடியாதெனக் கைவிடப்பட்டது. வேறு சிலரும் பார்க்க முடியாதெனக் கைவிட்டார்கள். மகளுக்கு வாயினாலும், சலத்தோடும் இரத்தம் வந்தது. பின்பு 8-ம் வாய்க்காலிலிருக்கும் திரு பொ. அப்புத்துரை என்ற விஷ வைத்தியர் மிக திறமையாக பிரயாசைப்பட்டு பார்வையினாலும் மருந்தினாலும் வைத்தியம் செய்து மாற்றினார். அவருக்கு மிகவும் நன்றி கூறுகின்றேன்."

பொ. அப்புத்துரை, விஷ வைத்தியர், 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம் P. O. 1538

தேவை

சைவ சமையல்காரர்: காந்தி நிலையம் மாணவர் இல்லத்துக்கு உடனே தேவை. மனேஜர், காந்திநிலையம், உருத்திரபுரம், பரந்தன். 1939

விற்பனைக்கு

1 ஸ்ரீ பி. எஸ். ஏ. பன்ரம் மேஜர் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: ஆ. சிவசம்பு, பைசிக்கிள் கடை (பஸ்நிலையத்திற்கு முன்பாக), சுன்னாகம். 1940

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

செக். நிபுணர்கள் இங்குவருவார்கள்

கொழும்பு, வெள்ளி

இங்கு நிறுவப்படவிருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய வேலைகளைக் கவனிப்பதற்காக செக்கோஸ்லவியாவில் இருந்து வரும் சனிக்கிழமை 8 நிபுணர்கள் வருவார்கள்.

இந்த சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான இடத்தை இவர்களே தேர்ந்தெடுப்பார்களென அறியப்படுகிறது.

பூசா, பியகம, வெல்லம்பிட்டியா ஆகிய மூன்று இடங்களே எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கு ஏற்ற இடமென அரசாங்கம் கருதிக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

உத்தியோக மொழிபற்றிய மந்திரிசபைத் தீர்மானம்

வாபஸ்பெற வேண்டுமென உடுப்பிட்டி எம். பி. பிரேரணை

கொழும்பு, வெள்ளி

உத்தியோக மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான 1963-ம் ஆண்டு செப்டம்பர் 23-ம் திகதிய மந்திரி சபையின் தீர்மானங்களையும் அதைத் தொடர்ந்து திறைசேரி விடுத்த உத்தரவுகளையும் வாபஸ் பெறவேண்டுமெனக் கோரும் பிரேரணையொன்றை உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஜனப்பிரதிநிதிகள் சபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

பிரேரணை விபரம் வருமாறு:

அரசகரும மொழிச்சட்டத்தை அமுல் நடத்துதல் சம்பந்தமான 1963, செப்டம்பர் 23 ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களை வாபஸ் பெற வேண்டும்.

(1) அரச கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துதல் சம்பந்தமான 1963 செப்டம்பர் 23ம் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களும் அவற்றின் விளைவான 1963 ஒக்டோபர் 18ம் திகதிய 619, 620, 621 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைகளும் சட்டவிரோதமானவையாகையாலும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளை மீறுவனவாகையாலும்.

(2) குறிப்பிட்ட அத்தீர்மானங்கள் சுற்றறிக்கைகள் ஆகியன வெளிப்படையாக வே நேர்மை, நீதியற்றவையாகையாலும் சிங்களம் பேசாத சிறுபான்மை யினத்தவர்களுக்கெதிராகப் பாரபட்சம் காட்டும் நோக்கம் கருதி இயற்றப்பட்டனவாகையாலும்

(3) அத்தீர்மானங்களும் சுற்றறிக்கைகளும் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களாலும் முன்னைநாள் நிதியமைச்சர்களில் ஒருவரான

(2-ம் பக்கம் பார்க்க)

முழு அறிக்கை . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற சமயம் காலி துறைமுகத்தில் ஹினுடும எம். பி திரு. ஹென்றி திஸநாயக்கா இருந்தார். அப்பொழுது அவருக்கு இரண்டு டெலிபோன் அழைப்புகள் வந்தன. "விசாரணையெதிலும் சாட்சியமளித்தால் கொலை செய்யப்படுவீர்" என்று டெலிபோன் மூலம் எம். பி. பயமுறுத்தப்பட்டார்.

மலைநாட்டில் கூட்டங்கள்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 17-ம் திகதி தமிழரசுகட்சி நடத்தவிருக்கும் நேரடி நடவடிக்கை குறித்து இலங்கைத் தொழிலாளர் கழகமும் பல தொழிற் சங்கங்களும் பொகவந்தலாவ, ஹட்டன் ஆகிய பகுதிகளில் நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் பல கூட்டங்களை நடத்தவிருக்கின்றன.

செனட்டர் மாணிக்கம் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், எம். பி. க்கள் ஆகியோர் இக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றுவார்கள்.

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) நீளாரா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மெரடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வீ. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி பி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்

மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.

இசை: கே. வி. மகாதேவன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபன ததாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

அமெரிக்க தளத்திற்கு

தண்ணீர் சப்ளையை கியூபா நிறுத்தியது

ஜனாதிபதி ஜோன்சன் அவசர ஆலோசனை

வாஷிங்டன், பெப் 7

கியூபாவிலுள்ள அமெரிக்கக் கடற்படைத் தளத்திற்கு தண்ணீர் சப்ளையை கியூபா நிறுத்தியதைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜோன்ஸன் தனது வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்குடனும், பாதுகாப்புமந்திரி திரு மக்னமாராவுடனும் ஆலோசனை நடத்தினர்.

என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி ஆலோசனை கூறுமாறு அவர் மந்திரிகளைக் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்கா, 38 கியூபா மீனவர்களைக் கைது செய்ததையடுத்து கியூபா தண்ணீர் சப்ளையை நிறுத்தியது.

இதற்கிடையில் ஆபிரிக்காவிலிருந்து அவசரமாகத் திரும்பிய ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்திக்கும் நோக்கம் கிடையாதெனக் கூறியிருக்கிறார். தமது மீனவர்களை விடுவிக்க முயற்சி செய்யுமாறு ஐ நா. தலைமைக் காரியதரிசியைக் கியூபா கேட்டிருக்கிறது.

நடுக்கடலில் மீனவர்களைக் கைதுசெய்த அமெரிக்காவின் செயல் ஆத்திரமூட்டும் நடவடிக்கை என்றும், கடற்கொள்ளை என்றும் ரஷ்ய பத்திரிகை 'பிராவ்டா' கூறியது.

அமெரிக்கக் கடற்படைப் பிராந்தியத்தில் தான் அவர்கள் கைதுசெய்யப்பட்டதாயும் இதில் 2 பே அமெரிக்காவில் அரசியல் புகலிடம் கேட்டிருப்பதாயும் வாஷிங்டனில் கூறப்பட்டது.

கியூபா தளங்களுக்கு அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் தண்ணீர் கொண்டுசெல்லும் என்றும், கியூபாவின் நடவடிக்கை தம்மை அதிகம் பாதிக்காது என்றும் வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில் மண்டல சார்பற்ற மகாநாடு

இந்திய உதவிமந்திரி தகவல்

கெய்ரோ, பெப். 7

இரண்டாவது மண்டலசார்பற்ற மகாநாடு செப்டம்பர் மாதம் நடைபெற வேண்டுமென தாம் யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோவுடன் நடத்திய பேச்சுக்களில் பொதுவான கருத்துத் தெரிவிக்கப்பட்டதென்று இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி திரு. தினேஷ்சிங் கூறினர்.

திரு. தினேஷ்சிங் அதிபர் டிட்டோவுடன் பேச்சு நடத்திவிட்டு புதுடில்லி திரும்பும் வழியில், நேற்றிரவு கெய்ரோ நிருபர்களிடம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் புதியநாடுகள்பற்றித் தாம் அதிபர் டிட்டோவுடன் ஆலோசனை நடத்தியதாயும், எனினும் இம்மாத பிற்பகுதியில் கெய்ரோவில் கூடவிருக்கும் தூதர்கள் மகாநாடு, எந்தெந்த நாடுகள் கலந்து கொள்ளவேண்டும் என்பதை முடிவு செய்யும் என்றும் அவர் கூறினர்.

செப்டம்பர் மாதம் நடைபெறவேண்டும் என பொதுவாக அபிப்பிராயம் இருந்தாலும், ஆகஸ்ட் மாதத்தில் மகாநாட்டை நடத்தினாலும் இந்தியா அதை ஆட்சேபிக்காதென்றும் அவர் கூறினர்.

மகாநாடு நடைபெறவிருக்கும் இடம் தூதர்கள் மகாநாட்டில் முடிவுசெய்யப்படும் என்றும் அவர் கூறினர். திரு. தினேஷ்சிங் புதுடில்லி திரும்பினர்.

'எக்ஸ்ரே' பிலிமுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், சனி

'எக்ஸ்ரே' படம் எடுப்பதற்கு, உபயோகிக்கப்படும் 'பிலிமுக்கு' தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் நாளாந்தமாக சுமார் 150 க்கு மேலாக 'எக்ஸ்ரே' படங்களை எடுத்து வந்த யாழ்ப்பாணம் அரசாங்க ஆஸ்பத்திரியில் இப்பொழுது 15 எக்ஸ்ரே படங்கள் மட்டுமே எடுக்கப்படுகின்றன. இதனால் தினமும் பலர் ஏமாற்றமடைந்து வீடு திரும்புகிறார்கள்.

தமது தேவை பற்றி சுகாதார இலாகா குறிப்பிட்ட பிலிம் தயாரிப்பாளருக்கு எழுதுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இத்தட்டுப்பாடு அகில இலங்கை பூராவும் நிலவுவதாக தெரியவருகிறது.

"சேவையை மறக்கமுடியாது"

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் நடைபெற்ற டாக்டர் பி. எஸ். டிஸ்பென்ஸரி திறப்புவிழாவில் டாக்டர் பி. எஸ், வின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்த முதலியார் முத்துத்தம்பி உரை நிகழ்த்துகையில்; காலஞ்சென்ற பி. எஸ். மாந்தருள் ஒரு மாணிக்கமென்றும் அவரின் சேவையை மறக்க முடியாதென்றும் கொடைவள்ளலான அவரின் உருவம் மக்களின் இதயத்தில் என்றுமிருக்குமென்றும் கூறினர். அவரின் பெயரை மங்கவிடாது இம் மருந்துச்சாலைக்கு அவரின் பெயரைச் சூட்டியது மிகவும் பொருத்தமானதென்றும் அவர் கூறினர்.

நோயாளர் கஷ்டம்

சிங்கள லிகிதரின் நியமனத்தால்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசாங்க ஆஸ்பத்திரி வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தின் பல் வைத்தியப்பகுதியிலும் பொது நோய் சிகிச்சைப் பகுதியிலும் சிங்கள லிகிதர்கள் வேலை பார்ப்பதால், பொது மக்கள் தமது தேவைகளை விளக்கமாகச் சொல்லவோ அல்லது அந்த லிகிதர்கள் அவற்றை விசாரணை செய்து எழுதவோ முடியாத கஷ்டம் ஏற்பட்டிருப்பதாக நோயாளர்கள் பலர் நமது நிருபருக்கு புகார் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் பொதுமக்களுடன் ஏற்படக்கூடிய தொடர்புகள் தமிழிலேயே அரசாங்க அதிபர் நடத்திக்கொண்டுவருகிறபொழுது நாளாந்தமாக பொது மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் அரசாங்க ஆஸ்பத்திரியில் சிங்கள லிகிதர்களை நியமித்து வைத்திருப்பது குறித்து நோயாளர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

திருமணம்

நல்லூர் வ. சுப்பையா அவர்களின் புதல்வன் திரு. சு. ஞானசெல்வம் (ஜெகந்நாதன்) (கிராமசபை தெல்லிப்பழை) அவர்களுக்கும் மாவிட்டபுரம் திருமதி தெ. சங்கரப்பிள்ளையின் புதல்வி செல்வி கனகம்மாவுக்கும் நாளை 9-2-64 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-31க்கும் 10-22க்குமிடையிலுள்ள சுப முகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் திருமணம் நடைபெறும் உறவினர்கள் நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வ. சுப்பையாவும் (P. W D)
பாரியாரும் யாழ்ப்பாணம்.
1944

திருமணம்

சாவகச்சேரி இராமலிங்கம் அவர்களின் புதல்வன் நாகநாதன் அவர்களுக்கும், உடுவில் க. சிவசுப்பிரமணியம் அவர்களின் புதல்வி திலோத்தமை அம்மாளுக்கும் தை மாதம் 27-ந் திகதி (9-2-64) ஞாயிற்றுக்கிழமையன்று திருமண விழா இனிது நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் சமுகந்தந்து மணவிழாவைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்,

க. சிவசுப்பிரமணியமும்,
பாரியாரும்.
பால்சங்கக் காரியதரிசி,
வலிகாமம் 1943

இன்று

யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் கந்தோரில் கடமையாற்றும் பிரதம லிகிதர் திரு. பொன்னுத்துரை இடமாற்றம் செய்யப்படுவதை தொழிற்சங்க ரீதியாக எதிர்க்கும் பொருட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை இன்று பிற்பகல் 4 மணிக்கு டிசன். சாள்ஸ் தமிழ் பாடசாலையில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தும். இக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள தொழிற்சங்கங்கள் அழைக்கப்பட்டுள்ளன. இக் கூட்டத்துக்கு திரு. கோடீஸ்வரன் தலைமை வகிப்பார்.

மருத்துவத்தாதி இல்லை

கச்சாய், வெள்ளி

கொடிகாமத்திற்கு நிரந்தரமாக ஒரு மருத்துவத்தாதி இல்லாத காரணத்தால் கர்ப்பிணிப் பெண்கள் எல்லோரும் மிருசுவில் ஆஸ்பத்திரிக்கும், சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கும் செல்லவேண்டியுள்ளது.

ஏற்கனவே கொடிகாமத்தில் நிரந்தரமாக இருந்த மருத்துவத்தாதி தற்பொழுது மிருசுவில் ஆஸ்பத்திரியில் பதில் தாதியாக கடமையாற்றி வருகிறார். மீசாலையிலுள்ள மருத்துவத்தாதிக்கு பிரயாணச் செலவு வழங்கப்படாத காரணத்தால் கொடிகாமத்திற்கு வரமுடியாமலிருக்கிறார்.

கொடிகாமத்தில் இருவர் கைது

கொடிகாமம், வெள்ளி

கொடிகாமத்திலுள்ள கடையொன்றில் பல வருடங்களாக வேலைசெய்துவந்ததாகக் கூறப்படும் கணபதிப்பிள்ளை சிவபாதம் ஆகிய இருவரையும் இரகசிய பொலிசார் இருவர் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என சந்தேகத்தின் மீது கைது செய்து கொண்டுசென்றுள்ளனர்.

தாங்கள் இலங்கைக்கு வந்து பதினைந்து வருடங்களுக்கு மேலாகிறதென்றும், கூப்பன் இருக்கிறதென்றும் இருவரும் இரகசிய பொலிசாரிடம் தெரிவித்தனர்.

சிவபாதம் என்பவர் இந்தியா செல்வதற்கு பாஸ்போட் பெற விண்ணப்பஞ் செய்துள்ளார் என்றும் தெரியவருகிறது.